# சங்கரன்கோவில் நகராட்சி

**2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ம் தேதி திங்கள் கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெற உள்ள நகர்மன்றசாதாரணக்கூட்ட நிகழ்ச்சி நிரல் :–**

பொருள் எண் **– 1**

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் **– 2**

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தினசரி நாளாங்காடி, தெருவோரங்களில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2021–2022 முதல் 2022–2023, 2023–2024 மூன்றாண்டு குத்தகை அனுபவிக்கும் உரிமத்திற்கு தினசரி நாளாங்காடி மற்றும் பேரூந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.பெ.முருகன் த/பெ.பெரியசாமி என்பவரும் தெருவோரங்களில் சுங்கம் வசூலிகும் உரிமத்திற்கு திரு.சு.திருமலைச்சாமி த/பெ.அழகுமுத்து என்பவரும் உரிமம் பெற்றிருந்தனர். தற்போது மேற்படி சுங்கம் வசூலிக்கும் உரிமத்தினை 31.03.2022ல் ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பத்துள்ளனர். மேற்கண்ட விபரம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1. நகராட்சியின் நடைமுறை விதிகளின்படி மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 3

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து,பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த

வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும்,நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | **1.25** |
| 601-1200 | **1.5** |
| 1201-1800 | **1.75** |
| >1800 | **2** |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | **1.75** |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | **2** |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | **1.75** |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும்சங்கரன்கோவில் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.05 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 1.97 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 5.54 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 2.35 |
| | **மொத்தம்** | **9.91** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், சங்கரன்கோவில் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75%சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

**மண்டல மதிப்பீடு**

**சொத்துவரி**

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| ஹ | ரூ.1.10 | ரூ.1.40 |
| க்ஷ | ரூ.0.85 | ரூ.1.05 |
| ஊ | ரூ.0.55 | ரூ.0.65 |

**காலிமனை வரி**

| மண்டலம் | சதுர அடிக்கு அரையாண்டுக்கு காலிமனை சொத்துவரி பைசாவில் | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப் பட்டுள்ள மதிப்பு |
| ஹ | முக்கியச் சாலைகள், மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச்செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் – ரூ.**0.30** பைசா | ரூ.**0.60** பைசா |
| க்ஷ | முக்கியச் சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச் செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை ரூ.**0.20** பைசா | ரூ.**0.40** பைசா |
| ஊ | குடியிருப்புப் பகுதிகள் உள்ள தெருக்கள் ரூ.**0.15** பைசா | ரூ.**0.30** பைசா |

**ஹ மண்டல வாரியான தெருக்களின் பட்டியல்**

| **வ. எண்** | **பழைய வார்டு எண்** | **புதிய வார்டு எண்** | **தெருக்களின் பெயர்** |
|---|---|---|---|
| 1 | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (மெயின்ரோடு) |
| 2 | **1** | **3** | 8ம் நிர் மெயின் ரோடு ( வார்டு 3) |
| 3 | **3** | **9** | 8ம் நிர் மெயின்ரோடு ( வார்டு 9) |
| 4 | **6** | **10** | 8ம் நிர் மெயின்ரோடு (வார்டு 10) |
| 5 | **28** | **13** | 8ம் நிர் மெயின்ரோடு (வார்டு 13) |

| | | | |
|---|---|---|---|
| 6 | **7** | **13** | திருவேங்கடம் சாலை (மெயின்ரோடு) |
| 7 | **5** | **14** | திருவேங்கடம் சாலை (வார்டு 14) |
| 8 | **10** | **15** | அண்ணா நகர் |
| 9 | **14** | **21** | சுந்தரர் தெரு |
| 10 | **14** | **21** | நேரு தெரு |
| 11 | **14** | **21** | சேக்கிழார் தெரு |
| 12 | **14** | **21** | கீழஅம்மன்சன்னதி தெரு |
| 13 | **14** | **21** | அங்கூர்விநாயகர்கோவில் தெரு |
| 14 | **14** | **21** | சௌந்திரபாண்டிய விநாயகர்கோவில் தெரு |
| 15 | **14** | **21** | கீழரதவீதி |
| 16 | **14** | **21** | 8ம் நிர் மெயின்ரோடு (வார்டு 21) |
| 17 | **25** | **23** | வடக்குரதவீதி |
| 18 | **25** | **23** | அம்மன்சன்னதி தெரு |
| 19 | **25** | **23** | சுவாமி சன்னதி தெரு |
| 20 | **25** | **23** | மேலரதவீதி |
| 21 | **25** | **23** | மேலரதவீதி (வி.ஐ.பி நகர்) |
| 22 | **24** | **24** | தெற்குரதவீதி |
| 23 | **21** | **26** | கச்சேரி ரோடு |

**<u>க்ஷ மண்டல வாரியான தெருக்களின் பட்டியல்</u>**

| **வ. எண்** | **பழைய வார்டு எண்** | **புதிய வார்டு எண்** | **தெருக்களின் பெயர்** |
|---|---|---|---|
| **1** | **30** | **1** | அண்ணாமலையார்சிட்டி |
| **2** | **30** | **1** | ஐவராஜா நகர் |
| **3** | **30** | **1** | கணபதி நகர் 1ம் தெரு |
| **4** | **30** | **1** | கணபதி நகர் 2ம் தெரு |
| **5** | **30** | **1** | கணபதி நகர் 3ம் தெரு |
| **6** | **30** | **1** | கணபதி நகர் 4ம் தெரு |
| **7** | **30** | **1** | கணபதி நகர் 5ம் தெரு |
| **8** | **30** | **1** | கணபதி நகர் 6ம் தெரு |
| **9** | **30** | **1** | திருப்பூர்குமரன் நகர் |
| **10** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 1ம் தெரு |
| **11** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 2ம் தெரு |
| **12** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 3ம் தெரு |
| **13** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 4ம் தெரு |
| **14** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 5ம் தெரு |
| **15** | **30** | **1** | ஏ.வி.ஆர்.எம்.வி.காலனி 6ம் தெரு |
| **16** | **30** | **1** | அகஸ்தியர்கோவில் தெரு |
| **17** | **30** | **1** | குருநாத நகர் 1ம் தெரு |
| **18** | **30** | **1** | குருநாத நகர் 2ம் தெரு |
| **19** | **30** | **1** | குருநாத நகர் 3ம் தெரு |
| **20** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 1ம் தெரு) |
| **21** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 2ம் தெரு) |
| **22** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 3ம் தெரு) |
| **23** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 4ம் தெரு) |
| **24** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 5ம் தெரு) |
| **25** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 6ம் தெரு) |
| **26** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 7ம் தெரு) |
| **27** | **30** | **2** | இரயில்வேபீடர் ரோடு (தென்பகுதி 8ம் தெரு) |

| | | | |
|---|---|---|---|
| 28 | 30 | 2 | சங்குபுரம் 6ம் தெரு |
| 29 | 30 | 3 | முல்லை நகர் 1ம் தெரு |
| 30 | 30 | 3 | முல்லை நகர் 2ம் தெரு |
| 31 | 30 | 3 | முல்லை நகர் 3ம் தெரு |
| 32 | 30 | 3 | முல்லை நகர் 4ம் தெரு |
| 33 | 30 | 3 | முல்லை நகர் 5ம் தெரு |
| 34 | 30 | 3 | முல்லை நகர் 6ம் தெரு |
| 35 | 30 | 3 | முல்லை நகர் 7ம் தெரு |
| 36 | 1 | 3 | சபாபதி நகர் |
| 37 | 1 | 4 | திருவுடையான் சாலை 1ம் தெரு |
| 38 | 1 | 4 | திருவுடையான்சாலை 2ம் தெரு |
| 39 | 1 | 4 | உழவர்சந்தை 1ம் தெரு |
| 40 | 1 | 4 | உழவர்சந்தை 2ம் தெரு |
| 41 | 1 | 4 | உழவர்சந்தை 3ம் தெரு (அறிவுதிருக்கோவில்) |
| 42 | 1 | 4 | திருவள்ளுவர் நகர் |
| 43 | 1 | 4 | கோமதிநகர் 1ம் தெரு |
| 44 | 1 | 4 | கோமதிநகர் 2ம் தெரு |
| 45 | 1 | 4 | கோமதியாபுரம் புது 1ம் வடக்குத் தெரு |
| 46 | 2 | 5 | பாரதியார் 8ம் தெரு |
| 47 | 2 | 5 | பாரதியார் 9ம் தெரு |
| 48 | 2 | 5 | பாரதியார் 10ம் தெரு |
| 49 | 2 | 5 | பாரதியார் 11ம் தெரு |
| 50 | 2 | 5 | பாரதியார் 12ம் தெரு |
| 51 | 2 | 5 | பாரதியார் 13ம் தெரு |
| 52 | 2 | 5 | பாரதியார் 14ம் தெரு |
| 53 | 2 | 5 | பாரதியார் 15ம் தெரு |
| 54 | 2 | 5 | பாரதியார் 16ம் தெரு |
| 55 | 2 | 5 | பாரதியார் 17ம் தெரு |
| 56 | 2 | 5 | பாரதியார் 18ம் தெரு |
| 57 | 2 | 5 | பாரதியார் 8ம் தெரு (கீழ்பகுதி) |
| 58 | 2 | 5 | பாரதியார் 8ம் தெரு (மேல்பகுதி) |
| 59 | 2 | 6 | பாரதியார் 7ம் தெரு |
| 60 | 2 | 6 | பாரதியார் 6ம் தெரு |
| 61 | 2 | 6 | பாரதியார் 5ம் தெரு |
| 62 | 2 | 6 | பாரதியார் 4ம் தெரு |
| 63 | 2 | 7 | பாரதியார் 3ம் தெரு |
| 64 | 2 | 7 | பாரதியார் 2ம் தெரு |
| 65 | 2 | 7 | பாரதியார் 1ம் தெரு |
| 66 | 2 | 7 | லெட்சுமியாபுரம் 7ம் தெரு |
| 67 | 2 | 7 | லெட்சுமியாபுரம் 7ம் தெரு (கீழ்பகுதி) |
| 68 | 4 | 8 | லெட்சுமியாபுரம் 6ம் தெரு |
| 69 | 4 | 8 | லெட்சுமியாபுரம் 5ம் தெரு |
| 70 | 4 | 8 | லெட்சுமியாபுரம் 4ம் தெரு |
| 71 | 5 | 8 | லெட்சுமியாபுரம் 3ம் தெரு |
| 72 | 1 | 9 | கோமதியாபுரம் புது 1ம் நடுத்தெரு |
| 73 | 3 | 9 | பெரியார் தெரு |
| 74 | 3 | 9 | கோமதியாபுரம் புது 1ம் தெரு |
| 75 | 3 | 9 | கோமதியாபுரம் புது 2ம் தெரு |
| 76 | 3 | 9 | கோமதியாபுரம் புது 3ம் தெரு |
| 77 | 3 | 9 | கோமதியாபுரம் 1ம் தெரு |

| | | | |
|---|---|---|---|
| 78 | 6 | 10 | கோமதியாபுரம் 2ம் தெரு |
| 79 | 6 | 10 | கோமதியாபுரம் 3ம் தெரு |
| 80 | 6 | 10 | கோமதியாபுரம் 4ம் தெரு |
| 81 | 6 | 10 | கோமதியாபுரம் 5ம் தெரு |
| 82 | 7 | 10 | கோமதியாபுரம் 6ம் தெரு |
| 83 | 29 | 11 | ராமசாமியாபுரம் 1ம் தெரு |
| 84 | 29 | 11 | ராமசாமியாபுரம் 2ம் தெரு |
| 85 | 29 | 11 | ராமசாமியாபுரம் 3ம் தெரு |
| 86 | 28 | 11 | ராமசாமியாபுரம் 4ம் தெரு |
| 87 | 27 | 12 | சஙகுபுரம் 1ம் தெரு |
| 88 | 27 | 12 | சஙகுபுரம் 2ம் தெரு |
| 89 | 27 | 12 | சஙகுபுரம் 3ம் தெரு |
| 90 | 27 | 12 | சஙகுபுரம் 4ம் தெரு |
| 91 | 30 | 12 | சஙகுபுரம் 5ம் தெரு |
| 92 | 28 | 13 | ராமசாமியாபுரம் 5ம் தெரு |
| 93 | 28 | 13 | ராமசாமியாபுரம் 6ம் தெரு |
| 94 | 28 | 13 | ராமசாமியாபுரம் 7ம் தெரு |
| 95 | 7 | 13 | கோமதியாபுரம் 7ம் தெரு |
| 96 | 7 | 13 | திருவுடையாபுரம் தெரு |
| 97 | 7 | 13 | தேவிபட்டினம் தெரு |
| 98 | 5 | 14 | லெட்சுமியாபுரம் 1ம் தெரு |
| 99 | 5 | 14 | லெட்சுமியாபுரம் 2ம் தெரு |
| 100 | 9 | 14 | தேனப்பபுரம் 1ம் தெரு |
| 101 | 9 | 14 | தேனப்பபுரம் 2ம் தெரு |
| 102 | 10 | 15 | புதுமனை 1ம் தெரு |
| 103 | 10 | 15 | புதுமனை 2ம் தெரு |
| 104 | 10 | 15 | புதுமனை 3ம் தெரு |
| 105 | 10 | 15 | புதுமனை புதுத்தெரு |
| 106 | 10 | 15 | மீரான்சேட் காலனி 1ம் தெரு |
| 107 | 10 | 15 | மீரான்சேட் காலனி 2ம் தெரு |
| 108 | 10 | 15 | மீரான்சேட் காலனி 3ம் தெரு |
| 109 | 5 | 15 | திருவேங்கடம் சாலை (வார்டு 15) |
| 110 | 5 | 15 | திருவேங்கடம் சாலை வடபகுதி |
| 111 | 5 | 15 | திருவேங்கடம் சாலை தென்பகுதி |
| 112 | 11 | 16 | புதுமனை 4ம் தெரு |
| 113 | 11 | 16 | புதுமனை 5ம் தெரு |
| 114 | 11 | 16 | புதுமனை 6ம் தெரு |
| 115 | 11 | 16 | பி.எஸ்.நகர் மெயின் ரோடு |
| 116 | 11 | 16 | பி.எஸ்.நகர் 1ம் தெரு |
| 117 | 11 | 16 | பி.எஸ்.நகர் 2ம் தெரு |
| 118 | 11 | 16 | பி.எஸ்.நகர் 3ம் தெரு |
| 119 | 11 | 16 | பி.எஸ்.நகர் 4ம் தெரு |
| 120 | 9 | 16 | கிருஷ்ணசாமி வீதி |
| 121 | 15 | 18 | காயிதேமில்லத் புது 1ம் தெரு |
| 122 | 9 | 19 | கீழக்செக்கடி தெரு |
| 123 | 8 | 19 | வடகாசியம்மன்கோவில் 1ம் தெரு |
| 124 | 8 | 19 | வடகாசியம்மன்கோவில் 2ம் தெரு |
| 125 | 8 | 19 | மாதாங்கோவில் தெரு |
| 126 | 8 | 19 | ஜாகிர்உசேன்தெரு |
| 127 | 15 | 20 | காயிதேமில்லத் 1ம் தெரு |

| | | | |
|---|---|---|---|
| 128 | 15 | 20 | காயிதேமில்லத் முடுக்குத்தெரு |
| 129 | 15 | 20 | காயிதேமில்லத் 2ம் தெரு |
| 130 | 17 | 20 | காயிதேமில்லத் 3ம் தெரு |
| 131 | 17 | 20 | காயிதேமில்லத் 4ம் தெரு |
| 132 | 17 | 20 | காயிதேமில்லத் 5ம் தெரு |
| 133 | 21 | 21 | வள்ளலார் தெரு |
| 134 | 21 | 21 | வாரச்சந்தை தெரு |
| 135 | 14 | 21 | குமரன் தெரு |
| 136 | 17 | 21 | காயிதேமில்லத் 6ம் தெரு |
| 137 | 26 | 22 | சங்கர் நகர் 1ம் தெரு |
| 138 | 26 | 22 | சங்கர் நகர் 2ம் தெரு |
| 139 | 26 | 22 | சங்கர் நகர் 3ம் தெரு |
| 140 | 26 | 22 | அப்பர் தெரு |
| 141 | 26 | 22 | மேலச்செக்கடித் தெரு |
| 142 | 25 | 22 | வடக்குரதவீதி உபசந்து 1 |
| 143 | 25 | 22 | வடக்குரதவீதி உபசந்து 2 |
| 144 | 25 | 22 | வடக்குரதவீதி உபசந்து 3 |
| 145 | 25 | 23 | மேலரதவீதி (திருநகர்) |
| 146 | 25 | 23 | மேலரதவீதி (ராமகிருஷ்ணா நகர்) |
| 147 | 25 | 23 | மேலரதவீதி (மகாகணபதி நகர்) |
| 148 | 25 | 23 | மேலரதவீதி (பொதிகை நகர்) |
| 149 | 24 | 24 | தெற்குரதவீதி (தபசு நகர்) |
| 150 | 24 | 24 | கிளாவடிவிநாயகர்கோவில் தெரு |
| 151 | 24 | 24 | ஆதிசங்கரவிநாயகர்கோவில் தெரு |
| 152 | 24 | 25 | சங்கரசித்திவிநாயகர்கோவில் தெரு |
| 153 | 23 | 25 | முத்துராமலிங்கபுரம் தெரு |
| 154 | 23 | 25 | ஓடைத்தெரு (வடபகுதி) |
| 155 | 23 | 25 | திரு வி.க.தெரு |
| 156 | 21 | 25 | திரு வி.க.புதுத்தெரு |
| 157 | 22 | 26 | ஆதிமூலவிநாயகர்கோவில் தெரு |
| 158 | 22 | 26 | உச்சினிமகாளியம்மன்கோவில் 1ம் தெரு |
| 159 | 22 | 26 | உச்சினிமகாளியம்மன்கோவில் 2ம் தெரு |
| 160 | 22 | 26 | உச்சினிமகாளியம்மன்கோவில் 3ம் தெரு |
| 161 | 22 | 26 | உச்சினிமகாளியம்மன்கோவில் 4ம் தெரு |
| 162 | 23 | 26 | ஓடைத்தெரு (தென்பகுதி) |
| 163 | 16 | 28 | காந்தி நகர் கீழ 4ம் தெரு (மெயின்ரோடு வார்டு 28) |
| 164 | 16 | 29 | காந்தி நகர் கீழ 4ம் தெரு (மெயின்ரோடு வார்டு 29) |
| 165 | 19 | 30 | பாட்டத்துார் (பரணி நகர்) |
| 166 | 19 | 30 | காவேரி நகர் 1ம் தெரு |
| 167 | 19 | 30 | காவேரி நகர் 2ம் தெரு |
| 168 | 19 | 30 | காவேரி நகர் 3ம் தெரு |
| 169 | 19 | 30 | காவேரி நகர் 4ம் தெரு |
| 170 | 19 | 30 | காவேரி நகர் 5ம் தெரு |
| 171 | 19 | 30 | காவேரி நகர் 6ம் தெரு |
| 172 | 19 | 30 | காந்தி நகர் கீழ 4ம் தெரு (மெயின்ரோடு வார்டு 30) |

ஊ மண்டல வாரியான தெருக்களின் பட்டியல்

| வ. எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 30 | 1 | அச்சம்பட்டி காலணித் தெரு |
| 2 | 16 | 17 | கக்கன் நகர் 1ம் தெரு |
| 3 | 16 | 17 | கக்கன் நகர் 2ம் தெரு |
| 4 | 16 | 17 | கக்கன் நகர் 3ம் தெரு |
| 5 | 16 | 17 | கக்கன் நகர் 4ம் தெரு |
| 6 | 16 | 17 | கக்கன் நகர் 5ம் தெரு |
| 7 | 16 | 17 | கக்கன் நகர் 6ம் தெரு |
| 8 | 12 | 18 | அம்பேத்கார் நகர் 1ம் தெரு |
| 9 | 13 | 18 | அம்பேத்கார் நகர் 2ம் தெரு |
| 10 | 13 | 18 | அம்பேத்கார் நகர் 3ம் தெரு |
| 11 | 13 | 18 | அம்பேத்கார் நகர் 4ம் தெரு |
| 12 | 13 | 18 | அம்பேத்கார் நகர் 5ம் தெரு |
| 13 | 12 | 18 | வள்ளுவர் தெரு |
| 14 | 12 | 19 | அம்பேத்கார் நகர் புது 1ம் தெரு |
| 15 | 12 | 19 | அம்பேத்கார் நகர் புது 2ம் தெரு |
| 16 | 25 | 23 | மேலரதவீதி (இந்திரா நகர்) |
| 17 | 25 | 23 | மேலரதவீதி (நேரு நகர்) |
| 18 | 20 | 27 | காந்தி நகர் 1ம் தெரு |
| 19 | 20 | 27 | காந்தி நகர் 2ம் தெரு |
| 20 | 20 | 27 | காந்தி நகர் 3ம் தெரு |
| 21 | 20 | 27 | காந்தி நகர் புது 1ம் தெரு |
| 22 | 20 | 27 | காந்தி நகர் புது 2ம் தெரு |
| 23 | 20 | 27 | காந்தி நகர் புது 3ம் தெரு |
| 24 | 18 | 28 | காந்தி நகர் 4ம் தெரு |
| 25 | 18 | 28 | காந்தி நகர் 5ம் தெரு |
| 26 | 18 | 28 | காந்தி நகர் 6ம் தெரு |
| 27 | 18 | 28 | காந்தி நகர் கீழ 3ம் தெரு |
| 28 | 16 | 28 | காந்தி நகர் கீழ 5ம் தெரு |
| 29 | 18 | 29 | காந்தி நகர் கீழ 1ம் தெரு |
| 30 | 18 | 29 | காந்தி நகர் கீழ 2ம் தெரு |
| 31 | 19 | 29 | காமராஜர் நகர் 3ம் தெரு |
| 32 | 19 | 29 | காமராஜர் நகர் 1ம் தெரு |
| 33 | 19 | 29 | காமராஜர் நகர் 2ம் தெரு |
| 34 | 19 | 30 | பாட்டத்துார் 1ம் தெரு |
| 35 | 19 | 30 | பாட்டத்துார் 2ம் தெரு |
| 36 | 19 | 30 | பாட்டத்துார் 3ம் தெரு |
| 37 | 19 | 30 | பாட்டத்துார் 4ம் தெரு |
| 38 | 19 | 30 | பாட்டத்துார் 5ம் தெரு |
| 39 | 19 | 30 | பாட்டத்துார் 6ம் தெரு |
| 40 | 19 | 30 | பாட்டத்துார் 7ம் தெரு |
| 41 | 19 | 30 | பாட்டத்துார் புது 1ம் தெரு |
| 42 | 19 | 30 | பாட்டத்துார் புது 2ம் தெரு |
| 43 | 19 | 30 | பாட்டத்துார் மேலக்காலணி 1ம் தெரு (கரையடி) |
| 44 | 19 | 30 | பாட்டத்துார் மேலக்காலணி 2ம் தெரு |
| 45 | 19 | 30 | பாட்டத்துார் மேலக்காலணி 3ம் தெரு |

| | | | |
|---|---|---|---|
| **46** | **16** | **30** | காந்தி நகர் கீழ 4ம் தெரு (குறிஞ்சி நகர் 1ம் தெரு) |
| **47** | **16** | **30** | காந்தி நகர் கீழ 4ம் தெரு (குறிஞ்சி நகர் 2ம் தெரு) |
| **48** | **16** | **30** | காந்தி நகர் கீழ 4ம் தெரு (தென்றல் நகர் 1ம் தெரு) |
| **49** | **16** | **30** | காந்தி நகர் கீழ 4ம் தெரு (தென்றல் நகர் 2ம் தெரு) |
| **50** | **16** | **30** | காந்தி நகர் கீழ 4ம் தெரு (தென்றல் நகர் 3ம் தெரு) |

அலுவலகக்குறிப்பு – மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 4
சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022ன்படி சொத்துவரி சீராய்வு சம்பந்தமாக பொதுமக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரி நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடவும், சொத்துவரி மண்டல மதிப்பினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும், பொதுமக்களுக்கு சொத்துவரி மற்றும் காலிமனைவரி சுயமதிப்பீட்டு படிவங்கள் அச்சகங்களிலிருந்து விலைப்புள்ளி பெற்று அச்சடிக்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 5
சங்கரன்கோவில் நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் தனது வார்டில் (22வது வார்டு) சங்கர்நகர், அப்பர் தெரு மற்றும் செக்கடித் தெருவில் பகிர்மான குழாய் விரிவுபடுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.6.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 6
சங்கரன்கோவில் நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் தனது வார்டில் (22வது வார்டு) சங்கர் நகர் 3ம் தெருவில் அம்மா உணவகம் அருகில் உள்ள பழுதடைந்துள்ள சிறுமின் விசை பம்ப் அறையை இடித்து அப்புறப்படுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.0.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 7
சங்கரன்கோவில் நகராட்சியின் நகர்மன்ற துணைத்தலைவர் தனது வார்டில் (வார்டு எண்.15) புதுமனை தெருவில் பகிர்மான குழாய் விரிவுபடுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி

பணியை மேற்கொள்ள ரூ.3.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 8

சங்கரன்கோவில் நகராட்சி 1 வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் அச்சம்பட்டியில் உள்ள தெருக்களுக்கு வாரம் ஒருமுறை லாரி மூலம் வழங்கப்படும் குடிநீரை வாரம் இருமுறை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். எனவேலாரிமூலம் குடிநீரை வாரம் இருமுறை வழங்குவதற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 9

சங்கரன்கோவில் நகராட்சி 2வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் சங்குபுரம் 6ம் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்த தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.5.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 10

சங்கரன்கோவில் நகராட்சி 3வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் சபாபதி நகரில் பகிர்மான குழாய் விரிவுபடுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.3.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 11

சங்கரன்கோவில் நகராட்சி 4வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் கோமதியாபுரம் புது 1ம் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.5.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 12

சங்கரன்கோவில் நகராட்சி 5வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் பாரதியார் நகரில் மழைநீர் வடிகால் வசதி அமைத்து தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.9.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 13

சங்கரன்கோவில் நகராட்சி 6வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் பாரதியார் 5ம் தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடங்களை புனரமைத்து தண்ணீர் வசதி அமைத்து தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.9.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 14

சங்கரன்கோவில் நகராட்சி 7வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் லெட்சுமியாபுரம் 7ம் தெரு மற்றும் பாரதியார் 1ம் தெருவில் பழைய மின்கம்பங்களை மாற்றியமைத்து தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 15

சங்கரன்கோவில் நகராட்சி 8வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் லெட்சுமியாபுரம் 4, 5 மற்றும் 6ம் தெருக்களில் பகிர்மான குழாய்களை விரிவுபடுத்தி தருமாறு தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.4.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் - 16

சங்கரன்கோவில் நகராட்சி 9வது வார்டு உறுப்பினர் தனது வார்டில் கோமதியாபுரம் புது 3ம் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி மற்றும் பழுதடைந்த பம்ப்

